**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-11012026-11253

Volume: 11

Issue: 1

Month: July

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 07.05.2026

Accepted: 10.06.2026

Published: 01.07.2026

Citation:
Priyadharsini, R. (2026). The Art of Dance in Epics. *Shanlax International Journal of Tamil Research, 11*(1), 47–56.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i1.11253

*Corresponding Author:
dr.r.priyadharsinidancer@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Art of Dance in Epics

**R. Priyadharsini**
*Post Doctoral Fellow, Central Institute of Classical Tamil*
*Perumbakkam, Chennai*
*https://orcid.org/0009-0002-1181-0175*

**Abstract**

*Following Sangam literature and didactic literature, the next genre of literature to emerge in Tamil was epic poetry. Epics are classified into two types: Sirukappiyam (minor epics) and Perunkappiyam (major epics). These two types differ only in scale; otherwise, there is no other distinction between them. Epics are characterized by a hero and heroine who are peerless; a purpose that encompasses the four goals of life virtue (Aram), wealth (Porul), pleasure (Inbam), and liberation (Veedu); descriptions of the five distinct landscapes (Tinai), a structure featuring various sub-plots linked to the main narrative; and the glorification of natural elements such as the country, city, rivers, and mountains. In Tamil literature, epics are classified into the 'Five Great Epics' (Aimperum Kappiyam) and the 'Five Lesser Epics'(Ainsiru Kappiyam).*

***Keywords:*** *Sangam Literature, Epics, Elements, Landscapes, Hero, Heroine.*

**References**

1. P. Saravanan, Silappadhikaram Ellorkkumaana Eliya Urai (Silappadhikaram – A Simple Commentary for All), Sandhya Padhippagam, 2008.
2. Ka. Panchangam, Silappadhikaram, Annam Padhippagam, 2008.
3. Silambozhi Su. Chellappan, Manimekalai Moolamum Thelivuraiyum (Manimekalai – Original Text with Clear Commentary), Bharathi Padhippagam, 1988.
4. Puliyur Kesigan, Manimekalai, Rhythm Veliyeedu, 2005.

# காப்பியங்களில் ஆடற்கலை

*ரா. பிரியதர்ஷினி*
முனைவர் பட்ட மேலாய்வாளர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், (தன்னாட்சி நிறுவனம்)
இந்தியக் கல்வி அமைச்சகம், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*சங்க இலக்கியம், நீதி இலக்கியங்களை அடுத்து, தமிழில் தோன்றிய இலக்கியங்கள் காப்பிய இலக்கியங்கள் ஆகும். காப்பியம் என்பது சிறுகாப்பியம், பெருங்காப்பியம் இருவகைப்படும். இவ்விருவகை காப்பியங்களும் அளவினால் மாறுபடுமே அன்றி இவ்விரண்டினுக்கும் வேறு எவ்வித வேறுபாடும் இருக்காது. காப்பியங்களில் பேசப்படும் தலைவன், தலைவி எனும் இருவரும் இணை இல்லாதவர்களாய் இருத்தலும், காப்பியத்தின் நோக்கம் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு பொருளைத் தருவதாய், ஐவகை நில வருணனைகளும், அடிநிலைக் கதையோடு தொடர்புடைய பல கிளைக் கதைகளைக் கொண்டிருப்பதாய், நாடு, நகர், ஆறு, மலை எனும் இயற்கைப் பொருள்களைச் சிறப்பிப்பதாய் அமைந்திருத்தலே காப்பியங்கள் ஆகும். தமிழ் மொழியில் காப்பியங்களை ஐம்பெரும் காப்பியம் ஐஞ்சிறு காப்பியம் என்று பகுத்துள்ளனர்.*
***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், காப்பியங்கள், கூறுகள், நிலம், தலைவன், தலைவி.*

ஐம்பெருங் காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி எனும் ஐந்தாகும். இவ்வைந்து நூல்களில் வளையாபதியும். குண்டலகேசியும் வழக்கில் இல்லை. ஐஞ்சிறு காப்பியங்கள் என்பன சூளாமணி, நீலகேசி, உதயணகுமார காவியம், யசோதரா காவியம், நாககுமார காவியம் எனும் ஐந்து. இவ்விரு காப்பியங்களில் நடனம் எவ்வாறெல்லாம் என்பது புலவர்களால் பேசப்பட்டது இங்கு ஆயப்படுகின்றது.

## சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் தமிழ் மொழியில் எழுதப்பட்ட முதல் காப்பியம் ஆகும். எழுதியவர் இளங்கோவடிகள். இக்காப்பியத்தினுக்கு இருவருடைய உரைகள் கிடைத்துள்ளன. முதல் உரையாகத் திகழ்வது அரும்பத உரையாசிரியரால் எழுதப்பட்டது. இரண்டாவது உரை அடியார்க்கு நல்லாரால் எழுதப்பட்டது.

சிலப்பதிகாரம் கோவலன், கண்ணகி, மாதவி எனும் மூன்று பாத்திரங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கதையில், பண்டையத் தமிழர் இசை, நாட்டியம், மக்கள் வாழ்வியல் போன்ற செய்திகள் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. சிலம்பினுள் பண்டைய தமிழர் நடனக்கலையையும் இசைக் கலையையும் இளங்கோ தெளிவாக எடுத்தோதியுள்ளார். இளங்கோவடிகள் சொல்லிச் சென்ற நடன இசைப் பகுதிகளுக்கு அரும்பதவுரை ஆசிரியரும், அடியார்க்கு நல்லாரும் சிறந்த உரைகளைத் தந்துள்ளனர்.

சிலப்பதிகாரம் தமிழர் நடன இசைக் கலைகளின் பெருமையைப் பேசிய முதல் நூல் மட்டுமன்று; முழுமையான நூலும் ஆகும். சிலப்பதிகாரத்தின் நடனச் செய்திகளை ஆய்வு செய்வதற்கு ஆய்வினை மூன்று தலைப்புகளின் கீழ் மேற்கொள்ள வேண்டும். அவை:

**நடனத்தைப் பற்றி இளங்கோவடிகள் சொல்வது**

**நடனத்தைப் பற்றி அரும்பத உரையாசிரியர் சொல்வது**

**நடனத்தைப் பற்றி அடியார்க்கு நல்லார் சொல்வது**

சிலம்பின் காலம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலம். அரும்பத உரையாசிரியரின் காலம் கி.பி. 9, 10ஆம் நூற்றாண்டு. அடியார்க்கு நல்லாரின் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு. மூன்று ஆசிரியர்களுக்கும் கால இடைவெளி இருப்பதால் இடைப்பட்ட காலத்தில் நடனத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் ஆய்ந்தறிந்து இரு உரையாசிரியர்களும் விளக்கங்களை தந்துள்ளனர். ஆனால் மூலநூல் நடனத்தைப் பற்றி சொல்லிய செய்திகள் மூல நூலின் எழுத்துக்களினாலேயே விளக்க வேண்டும். எனவே மேற்குறிப்பிட்டுள்ள மூன்று நிலைகளும் தனித்தனியே ஆய்ந்து விளக்கப்பட்டுள்ளன.

## சிலப்பதிகாரம் காட்டும் நடனச் செய்திகள்

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில் இளங்கோவடிகள் பல நடனச் செய்திகளை முறைப்படக் கூறியுள்ளார். நடனத்தினைக் கற்று முறையாக அரங்கேறுவதற்கு ஒரு நடனப்பெண் எவற்றை எல்லாம் பெற்றிருக்க வேண்டும் என்பதை சிலப்பதிகாரம், பின்வருமாறு கூறுகிறது.

ஆடல், பாடல், அழகு இம்மூன்றிலும் சிறந்தவளாய், இம்மூன்றில் ஒன்றுகூட குறையாதிருக்க வேண்டும்.

ஐந்து வயது முடிந்ததன் பின் கற்கத் தொடங்கி ஏழு ஆண்டுகள் இடைவிடாது முறையாகக் கற்று பன்னிரண்டு வயதில் அரங்கேற்றத்தினை மன்னன் முன் செய்தல் வேண்டும்.

இதனை,

> **“ஆடலும் பாடலும் அழகும் என்று இக்**
> **கூறிய மூன்றில் ஒன்று குறைவு படாமல்**
> **ஏழு ஆண்டு இயற்றி ஓர்ஈர்ஆறு ஆண்டில்**
> **சூழ் கழல் மன்னர்க்குக் காட்டல் வேண்டி”**
> ***(சிலம்பு 3:8-11)***

நடனமாக எவற்றைக் கற்க வேண்டும் எனும் வினாவினுக்கு வேந்தன் அவையில் செய்யும் கூத்தினையும் பொதுமக்கள் முன் ஆட வேண்டிய கூத்தினையும் அவற்றின் இலக்கணங்களையும் கற்றிருக்க வேண்டும். இதை

> **“கூத்தின் இலக்கணம் அறிந்து**
> **பலவகைக் கூத்தும் விலக்கினில் புணர்த்து”**
> ***(சிலம்பு 3:12-13)***

எனும் வரிகளின் மூலம் விளக்கியுள்ளது.

ஆடுதற்குரிய நடனங்களென பதினோரு விதமான ஆடல்களையும், பலவகைக் கூத்துகளையும் அறிந்து எதனை எங்கு எவ்வாறு செய்ய வேண்டும் எனும் முறைகளையும் அறிந்து, ஆடலுக்குரிய பாட்டினையும் உரிய தாளத்தினையும் அறிந்து நடனத்தினைச் செய்ய வேண்டும் என்கின்றது. இதனைச் சிலம்பு,

> **“பதினோரு ஆடலும் பாட்டும் கொட்டும்**
> **விதிமாண் கொள்கையின் விளங்க அறிந்தாங்கு**
> **ஆடலும் பாடலும் பாணியும் தூக்கும்**
> **கூடிய நெறியினை கொளுத்தும் காலை”**
> ***(சிலம்பு 3:14-17)***

என்று விளக்கியுள்ளது.

நடனத்தினை ஆடுகின்ற போது ஒற்றைக் கை செய்கைகளையும், இரட்டைக் கை செய்கைகளையும் முறையாகச் செய்து எழிலாகக் கையினை இயக்குகின்றபோது அதில் பொருளினைக் காட்டாமலும், பொருளினைச் சுட்டி கைகளை இயக்கும்போது அதில் எழில் தன்மை உட்புகாமலும், ஒற்றைக் கை செய்யும் செயல்களின் போது இரட்டைக் கைச் செய்கைகளைச் செய்யாமலும், இரட்டைக் கை செய்யும் செய்கைகளைச் செய்யும்போது ஒற்றைக்கை செய்கைகளைச் செய்யாமலும், தேசி என்று சொல்லப் படுகின்ற வட்டார வழக்கில் உள்ள நடனங்களைச் செய்கின்றபோது அவைகளின் தனித்தன்மை வாய்ந்த கைச்

செயல்களைச் செய்தும், மார்கம் என்று சொல்லப்படுகின்ற செவ்விய நடனத்தினைச் செய்கின்றபோது அதற்குரிய கைச் செய்கைகளை மட்டுமே செய்தல் வேண்டும். இதனை,

**"பிண்டியும் பிணையலும் எழிற்கையும் தொழிற்கையும்**
**கொண்ட வகை அறிந்து சுத்துவரு காலைக்**
**வாரம் செய்தகை கூடையில் களைதலும்**
**பிண்டி செய்தகை ஆடலில் களைதலும்**
**கூடை செய்தகை வாரத்துக் களைதலும்**
**ஆடல் செய்தகை பிண்டியில் களைதலும்"**

***(சிலம்பு.3:18-23)***

என்கின்றது.

நடனம் ஆடுகின்றவர் குரவைக் கூத்தினையும் வரிக் கூத்தினையும் அறிந்திருக்க வேண்டும் என்கின்றது. இதனை,

**"குரவையும் வரியும் விரவல செலுத்தி**
**ஆடற்கு அமைந்த"**

***(சிலம்பு 3:24-25)***

என்று வரிகள் விளக்கியுள்ளன.

அடுத்து, நடனத்தினுக்கு உறுதுணையாய் உள்ள இசை ஆசிரியன், பாடல் ஆசிரியன் இவர்களைப் பற்றியும் சிலம்பு விளக்குகின்றது.

## இசை ஆசிரியன்

இசை ஆசிரியன் யாழுடனும் குழலுடனும் பொருந்தி இசைக்கக்கூடிய அளவில் குரல் வளம் பெற்றிருக்க வேண்டும்.

**தாளத்தின் வகைமை எல்லாம் அறிந்து**
**தாளம் இயையப் பாடல் வேண்டும்.**
**நடனத்தினுக்கு என்றமைந்த பாடும்**
**முறையைத் தேர்ந்து பாடல் வேண்டும்.**
**அகக்கூத்து புறக்கூத்து எனும்**
**இருவகைக் கூத்தின் பாடல்களை**
**பாடுதற்கு ஆற்றல் பெற்றவனாய்**
**11 ஆடல்களுக்கு உரிய பாடல்களை**
**நன்கு அறிந்தவனாய்,**
**மொழி அறிவு மிக்கவனாய்,**
**மொழியோடு இசை பொருந்தி வரும்**
**திறம் அறிந்தவனாய், இசையால்**
**மொழியைச் சிதைக்காதவனாய்,**
**பன்மொழிப் புலமை உடையவனாய்,**
**பாடலை எழுதியவரின் உளம் அறிந்தும்**
**நடனத்தை உருவாக்கும் புலவனின்**
**மனம் உணர்ந்தும்,**
**எங்கு பாடல்களின் இசைத்தன்மை**
**விரித்துச் சொல்லப்பட வேண்டுமோ**
**அங்கு விரித்தும், குறைக்கும் இடத்து**
**குறைத்தும் பாடுதற்கு அறிந்திருக்க**
**வேண்டும் என்கின்றது சிலப்பதிகாரம்.**

## கவிஞன் ஆற்றல்

தமிழில் உள்ள இயல் இசை நாடகம் எனும் மூன்றினையும் நன்கு அறிந்தவனாய், வேத்தியல் பொதுவியல் எனும் இருவகை நடனங்களுக்குப் பாடல் எழுதும் முறை அறிந்தவனாய், எழுதும் பாடலில் இசைத் தன்மை பொருந்தி வரக்கூடிய அளவில் மொழியின் தன்மையைச் சிதைக்காமல் பாடல் எழுதும் திறனை உடையவனாய், குற்றமற்ற சொற்களால் பாடலை உருவாக்கத் தெரிந்தவனாய், நாட்டியத்தினுக்குரிய பாடல்களை செய்யவல்ல பல நல்ல நூல்களைக் கற்றுணர்ந்தவனாய் கவிஞன் இருக்க வேண்டும் என சிலப்பதிகாரம் கூறியுள்ளது.

பாடலையும், அப்பாடல் இசையுடன் கூடிவரும் வழிமுறைகளையும் அறிந்த பாடல் கலைஞன், கவிஞன் இயல்புகளையெல்லாம் எடுத்துக் கூறிய சிலப்பதிகாரம். தண்ணுமை என்ற சொல்லப்படக்கூடிய தாள வாத்தியத்தினை இயக்கும் கலைஞனை விளக்குகின்றது. நடனக் கலைக்கு காலம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்று. காலத்தை ஆடலில் முறையாக வகுத்தும் விரித்தும் செயற்படச் செய்பவன் தாளங்களை நன்கு கற்ற தண்ணுமைக் கலைஞனே. இனி தண்ணுமை ஆசிரியன் திறன்களைப் பகுத்துரைப்பது பின்வருமாறு:

### தண்ணுமை வாசிப்போன்

எல்லாக் கூத்துகளுக்கும் உரிய தாளத்தை வகைப்படுத்தி அறிந்திருக்க வேண்டும்.

பாடல்களுக்கு உரிய அனைத்துத் தாள முறைகளைத் தெரிந்திருக்க வேண்டும்.

அனைத்து இசைக் கருவிகளுக்கும் பொருந்தி வரத்தக்க நிலையில் தண்ணுமையை இயக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்.

தாளத்தை எங்கு தொடங்க வேண்டும் எங்கு நிறுத்த வேண்டும் என்பவற்றை அறிந்திருக்க வேண்டும்.

வரிப் பாடல்களுக்கும் கூத்துக்களுக்கும் உரிய தாளங்களை முறைப்பட அறிந்திருக்க வேண்டும்.

இசைக் கருவிகளினால் எழுப்பப்படும் இசை, வாயினால் பாடப்படும் பாடல் இவற்றின் இசைத்தன்மை சிதையாத வண்ணம் தண்ணுமையை இயக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

கேட்போர் செவிக்கு இன்பத்தினையே தரவல்லவனாய் தனது இயக்கத்தால் செய்கின்ற வாசித்தல் தொழிலை அழ கூட்டச் செய்பவனாய் இருத்தல் வேண்டும் என்று தண்ணுமையை இயக்கவல்ல கலைஞனின் சிறப்பினை வகுத்துக் கூறியுள்ளது சிலப்பதிகாரம்.

நடனத்தினுக்குரிய பாடல்களுக்கு இனிய இசையினை வழங்கும் கருவிகள் இரண்டு. அவை குழல், யாழ் என்பன. இவ்விரண்டு இசைக்கருவிகளை இயக்கும் கலைஞர்களின் திறத்தை சிலப்பதிகாரம் செவ்விய முறையில் விளக்கியுள்ளது.

### குழல் இசைப்போன்

குழல் இசைக்கும் முறைகளைச் சொல்லவல்ல நூல்களின் செய்திகளை நன்கு அறிந்தவனாய்,

சித்திரம், வஞ்சனை எனும் இருவகைப்பட்ட இசைப் புணர்ப்புகளை அறிந்தவனாய். பாடல் ஆசிரியனின் மனம் அறிந்தவனாய், 103 பண்களின் தன்மை அறிந்தவனாய், இசை நூல் வழக்கை அறிந்தவனாய், முழவின் செயல்பாட்டையும் தண்ணுமையின் செயல்பாட்டையும் நன்கு உணர்ந்து அவைகளுக்கு பொருந்தி வரக்கூடிய அளவில் வாசித்தலைச் செய்பவனாய், யாழின் அடிமணையாகிய சுரத்துடன் தனது குழலின் சுரத்தைப் பொருத்தமுடன் வைத்து இறுதி வரை வாசிப்பவனாய், பாடும் பண்மரபுகளுக்குச் சுரம் வாசிக்கத் தெரிந்தவனாய், பண் இலக்கணம் பதினொன்றினையும் அறிந்தவனாய் இருத்தல் வேண்டும் என்கின்றது.

### யாழ் ஆசிரியன்

ஏழு பாலைகளின் செயற்பாடு களை நன்கு தெரிந்து வாசித்தலைச் செய்பவனாய், பாடலைப் பாடுகின்ற தோரிய மடந்தையர்களின் சுருதிகளுக்கு ஒப்ப இசைப்பவனாய், ஒரு பாலையில் இருந்து பிரிதொரு பாலையைச் சுழற்சி முறையால் அறிந்து இசைக்க வல்லவனாய், யாழினது வலிவும் மெலிவும் அறிந்து இசைக்க வல்லவனாய் இருத்தல் வேண்டும் என்று சிலப்பதிகாரம் விளக்கியுள்ளது. ஆடும் மகளின் அறிவு ஆற்றல் செயல்முறை ஆடலுக்கு உகந்த இசை, பாடல், தண்ணுமை, குழல், யாழ் இவற்றின் செயல்பாட்டையெல்லாம் விளக்கிய பின்னர் சிலப்பதிகாரம் நாட்டியம் ஆடும் அரங்கின் அமைப்பைக் கூறியுள்ளது.

### அரங்கின் அமைப்பு

நால்வகைக் குற்றங்கள் நீங்கிய நிலத்தில் அரங்கு உருவாக்கப்பட வேண்டும்.

24 விரல் அளவு உடைய கோலில் 7 கோல் அகலமாய் 8 கோல் நீளமாய் ஒரு கோல் உயரமாய் ஆடல் அரங்கு இருத்தல் வேண்டும்.

விதானம் என்று சொல்லப்பட்ட உத்தரப் பலகை மேடையிலிருந்து நான்கு கோல் உயரத்தில் அமைக்கப்பட வேண்டும்.

நடன மேடை இரண்டு வாயில்களைக் கொண்டிருக்க வேண்டும்.

நால்வகை வருணத்தாரின் வழிபடு பூதங்களின் உருவங்களை எழுதியிருக்க வேண்டும்.

மேடை மேலுள்ள தூண்கள் நன்கு அமைக்கப்பட வேண்டும். அத்தூண்களின் நிழல் நடன மேடையிலோ பார்வையாளர் அரங்கிலோ விழாதிருக்க வேண்டிய அளவில் விளக்குகளைப் பொருத்த வேண்டும்.

நடன மேடையில் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி இவற்றை அமைத்திருக்க வேண்டும்.

நடன மேடையின் கூரையிலிருந்து மலர் மாலைகளையும் முத்து மாலைகளையும் கொண்டு நடனமேடை அலங்கரிக்கப்பட வேண்டும் என்று விளக்குகின்றது.

நடனத்தில் தேர்ந்தவர்களுக்கு உரிய தலைக்கோல் எனும் தகுதியை எவ்வாறு வழங்க வேண்டும்; அத்தலைக்கோலின் சிறப்பு என்ன என்பதையும் சிலப்பதிகாரம் விளக்கியுள்ளது.

## தலைக்கோலின் சிறப்பு

பகை மன்னர்களை வென்று அம்மன்னர்களின் வெண்கொற்றக் குடையின் காம்பில் பலவாகிய நவமணிகளைப் பதித்து உயரிய பொன்னால் இடை இடையே வைத்து அக்கோலை இந்திரனது மகனான சயந்தன் எனக் கருதி கோவிலில் அக்கோலை வைத்து பல புண்ணிய நதிகளில் இருந்து நீரினைக் கொணர்ந்து நீராட்டு செய்து முரசுகள் ஒலிக்க ஐம்பெரும் குழுவினர் தொடர ஒரு பல்லாக்கில் வைத்து எடுத்து ஊர்வலமாகக் கொண்டு வந்து நடனத்தில் சிறந்தவர்க்குத் தருதல் மரபு. இத்தகு சிறப்புடைய தலைக் கோலைப் பெறுவதற்கு மாதவி ஆடிய நடன முறையினைச் சிலம்பு விளக்கியுள்ளது.

## மாதவியின் நடனம்

இசைக் கலைஞர் இசைக் கருவிகளை இசைத்திட மேடையில் வலதுகாலை முன்வைத்து ஏறி வலது தூணினைச் சென்றடைதலே வழக்கில் உள்ள முறை என்றறிந்து மாதவி சென்று நிற்க, இடது தூணின் அருகே இசைப் பாடலைப் பாடுகின்ற தோரியமடந்தையர் நிற்க, பாடலும் இசைக்கருவிகளும் ஒன்றாய் இசைத்திட குழலின் சுருதிக்கு யாழின் சுருதி ஒத்திசைக்க, யாழின் சுருதிக்கு இணையாகத் தண்ணுமை ஒலிக்க தண்ணுமையின் ஒலிக்கு இணையாக முழவு ஒலிக்க, முழவின் ஒலிக்கு இணையாக ஆமந்திரிகை ஒலிக்க தாளகதி மாறாமல் மாதவி மண்டில நிலையில் தேசிக் கூத்தெல்லாம் ஆடி முடித்தபின் தேசிக் கூத்தினைப்போன்று வடுகு எனும் கூத்தினை மட்டதாளம் முதல் ஏகதாளம் வரையில் வைசாக நிலையில் ஆடி முடித்தனள். பின்னர் புறநடனமாகிய நாட்டியத்தை இலக்கண நூல்கள் சொல்லிய முறையில் விதிமுறை மாறாமல் விலக்குறுப்புகள் பதினான்கின் வழுவாமல் ஆடிக் காட்டி தனக்குரிய தலைக்கோல் தகுதியைப் பெற்றாள்.

மாதவியின் அரங்கேற்றத்தை விளக்கிய சிலப்பதிகாரம் இந்திர விழாவில் மாதவி ஆடிய ஐந்து விதமான கௌத்துவத்தையும் பதினோரு ஆடல்களையும் விவரிக்கின்றது.

## பஞ்சசந்தி கௌத்துவம்

கௌத்துவம் என்பது நடனத்தை நிகழ்த்தும்போது எவ்வித குறைவும் வந்து விடுதல் கூடாது என்பதற்காய் ஆடும் முதல் நடன நிகழ்வு ஆகும். இவ்வாறு ஆடும் நடனத்தைக் கௌத்துவம் என்பது மரபு, மாதவி இந்திர விழாவில் பொதுமேடையில் மக்கள் அனைவரும் கண்டு மகிழ தனது நடனத்தைத் தொடங்கினாள்.

முதலில் மாயோன் ஆகிய திருமாலை வழிபட்டு அவனைப் புகழ்ந்து பாடும் தேவபாணி பாடலைப் பாடி, பின்னர் நால்வகை வருணப் பூதங்களைப் பாடி, அவர்களுக்குரிய கௌத்துவத்தைப் பாடி ஆடி, பின் நிலவின் மீது கௌத்து

வத்தைப் பாடி ஆடி, தனது ஆடலைத் தொடங்கினாள். இதனை,

**"மாயோன் பாணியும் வருணப் பூதர்**
**நால்வகைப் பாணியும் நலம்பெறு கொள்கை**
**வானூர் மதியமும் பாடிப் பின்னர்"**
***(சிலம்பு.6: 35-37)***

என்று சிலம்பு விளக்கியுள்ளது.

கௌத்துவத்தைத் தொடர்ந்து மாதவி பதினோரு ஆடல்களை ஆடினாள்.

### பதினோரு ஆடல்கள்

பதினோரு ஆடல்களும் வகைக் கூத்தினுள் அடங்கும். ஏனெனில் இறைவர் தத்தம் தனித்தன்மையில் ஆடியதால் வகைக் கூத்து எனப் பெயர் பெற்றது. பதினோரு ஆடல்கள் பின்வருமாறு:

**சிவனார் ஆடிய கொடுகொட்டியும்**
**பாரதி ஆடிய பாண்டரங்கமும்**
**திருமால் ஆடிய அல்லியமும்**
**திருமால் ஆடிய மல்லாடலும்**
**முருகன் ஆடிய துடியும்**
**முருகன் ஆடிய குடையும்**
**திருமால் ஆடிய குடமாடலும்**
**காமன் ஆடிய பேடிஆடலும்**
**உமையவள் ஆடிய மரக்கால் ஆடலும்**
**திருமகள் ஆடிய பாவை ஆடலும்**
**இந்திராணி ஆடிய கடைசியர் ஆடலும்**

மாதவி விதிமுறை வழுவாமல் ஆடினாள், பதினோரு ஆடலை ஆடியபின் மாதவிபால் சினம் கொண்ட கோவலன் தன்னைப் பார்க்க வந்த வயந்தமாலையிடம் மாதவி எவ்வாறு எல்லாம் ஏமாற்றினாள் என்பதை விளக்க மாதவி செய்த வரிக்கோலங்களை விளக்குவதாக சிலப்பதிகாரம் எடுத்து மொழிகின்றது.

### வரிக்கோலம்

வரிக்கோலம் எனும் நடனம் பெண்கள் எவ்வாறெல்லாம் தங்களின் காதலை வெளிப்படுத்துவர் என்பதைக் கூறும் நடனச் செயல்பாடுகள் ஆகும். இதனை வரிக்கோலம் என்பர். இதனைச் சிலம்பு,

**"குவளையும் குமிழும் கொவ்வையுங் கொண்ட**
**மாதர்வாண்முகத்து மதைஇய நோக்கமொடு**
**காதலிற் தோன்றிய கண்கூடு வரியும்**
**புயல்சுமந்து வருந்திப் பொழிகதிர் மதியதத்துக்**
**கயல்உலாய்த் திரிதரும் காமர் செவ்வியில்**
**பாகு பொதி பவளம் திறந்து நிலா உதவிய**
**நாகிள முத்தின் நகை நலம் காட்டி**
**வருகென வந்து போகெனப் போகிய**
**கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமும்**
**அந்திமாலை வந்ததற்கு இரங்கிச்**
**சிந்தைநோய் கூருமென் சிறுமை நோக்கிக்**
**களிபுரை ளெவியும் மடஅன நடையும்**
**களில் சாயலும் சாத்தனள் ஆகிச்**
**செருவேல் நெடுங்கண் சிலதியர் கோலத்து**
**ஒருதனி வந்த உள்வரி ஆடலும்**
**சிலம்புவாய் புலம்பவும் மேகலை ஆர்ப்பவும்**
**கலம்பெறா நுசுப்பினள் காதல் நோக்கமொடு**
**திறத்துவேறாய என் சிறுமை நோக்கியும்**
**புறத்துநின்று ஆடிய புன்புற வரியும்**
**கோதையும் குழலும் தாதுசேர் அளகமும்**
**ஒருகாழ் முத்தமும் திருமுலைத் தடமும்**
**மின்னிடை வகுத்த நன்னுதல் தோன்றிச்**
**சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி உய்ப்பப்**
**புணர்ச்சியுள் பொதிந்த கலாந்தரு கிளவியின்**
**இருபுற மொழிப்பொருள் கேட்டனள் ஆகித்**
**தளர்ந்த சாயல் தகைமென் கூந்தல்**
**கிளர்ந்து வேறாகிய கிளர்வரிக் கோலமும்**
**பிரிந்துறை காலத்துப் பந்தனள் ஆகி**
**என்னுறு கிளைகட்குத் தன்னுறு துயரம்**
**தேர்ந்து தேர்ந்து உரைத்த தேர்ச்சிவரி அன்றியும்**
**வண்டலர் கோதை மாலைஉள் மயங்கிக்**
**கண்டவர்க்கு உரைத்த காட்சி வரியும்**
**அடுத்தடுத்து அவர்முன் மயங்கிய மயக்கமும்**
**எடுத்தவர் தீர்த்த எடுத்துக்கோள் வரியும்"**

எனும் எட்டுவரிக் கோலங்களையும் விளக்கியுள்ளது.

சிலப்பதிகாரம் மாதவி ஆடிய பலவித நடனங்களையும் கூத்துக்களையும் வரிக்கோலங்களையும் விளக்கியதோடு அக்காலத்து இருந்த நிலம்சார் நடனங்களையும் விளக்கியுள்ளது. நிலம்சார் நடனங்களாவன: வேட்டுவவரி. ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை என்பன.

வரிப்பாடல் என்பன தெய்வம் சுட்டியும் மக்களைப் பழிச்சியும் அமையக்கூடிய நிலம்சார் பாடலும் ஆடலும் ஆகும்.

### வேட்டுவவரி

பாலை நிலத்தைச் சார்ந்தது. பாலை நிலத் தெய்வம் கொற்றவை. பாலை நிலமக்கள் எயினர். அவர்களது செய்தொழில் கொள்ளை இடுதல். அம்மக்களின் செயல்பாடுகள் முழுமையாக இல்லை என்பதால் சாலினி என்பாள் தெய்வம் உற்று அம்மக்களிடம் அவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டுவதாக வேட்டுவவரியைச் சிலப்பதிகாரம் காட்டியுள்ளது.

வேட்டுவவரியைஒருநடனநிகழ்வாகவே சிலம்பு எடுத்து மொழிகின்றது.

சாலினி தெய்வம் உற்று பேசுதல் என்பது முன்னிலைப் புறமொழியாக உள்ளது. இது நடன நாடகத்தில் கட்டியங்காரன் செயல் போன்றது.

சாலினியை எயினர்கள் வணங்கி அவளைக் கொற்றவையாகவே எண்ணி ஒப்பனை செய்கின்றனர். இது நடனத்தில் உள்ள ஆகாரியம் எனும் அபிநயத்துள் அடங்கும். பின்னர் வழிபாட்டினைச் செய்வதற்கு களன் தயாரிக்கப்படும். இது முன்றில் சிறப்பு என்று கூறப்படும். எயினர் ஒன்றுகூடி வள்ளிக் கூத்தினை நிகழ்த்துவர். அதன்பின் முன்னிலைப் பரவல் நடைபெறும். அடுத்து கொற்றவையின் வெற்றியைப் புகழும் வென்றிக் கூத்து நடைபெறும். தொடர்ந்து கூத்தினைப் போர்த் துறைகளைச் சார்ந்த துறைகளாக வெட்சி, வெட்சிப் புறநடை, கொடை, அவிப்பலி. பலிக்கொடை எனும் முறைகளில் கூத்து நடைபெறும். இவ்வாறு அமையும் வேட்டுவ வரி நடனத்தில் உள்ள வர்ணம் எனும் பகுதியைச் சார்ந்ததாக அமையும்.

நடனத்தில் வர்ணம் என்பது, பாடப்படும் தலைவன் (இறைவன்) அல்லது தலைவி (இறைவி) இவர்களின் ஆற்றல், சிறப்பு, புகழ் போன்றவற்றவை எடுத்து மொழிந்தும், நடித்து மகிழ்ந்தும் காட்டுவது. இத்தகு வர்ணம் போன்றே வேட்டுவவரி அமைந்துள்ளது. சிலம்பின் காலத்தில் உள்ள நடன மரபுகளையே இன்றுவரை பரதநாட்டியம் தொடர்ந்து கையாண்டு வருகின்றது என்பதற்குச் சான்றாய் வேட்டுவ வரி உள்ளது. வேட்டுவவரியினை அடுத்து அமைவது ஆய்ச்சியர் குரவை.

### ஆய்ச்சியர் குரவை

முல்லை நில மக்களின் குரவை ஆய்ச்சியர் குரவை ஆகும். முல்லை நிலம் என்பது காடும் காடு சார்ந்த பகுதியும். முல்லை நிலத்தெய்வம் திருமால். முல்லை நில மக்கள் இடையர்கள். முல்லை நில மக்கள் தங்களுக்கு நேர்ந்த துன்பங்களில் இருந்து தங்கள் தெய்வமான திருமால் தங்களைக் காக்க வேண்டி ஆடப்படும் கூத்து ஆய்ச்சியர் குரவை ஆகும். இக்குரவைக் கூத்து,

உரைப்பாட்டுமடையில் தொடங்கும். உரைப்பாட்டு மடை என்பது இடையர்கள் தங்களுக்கு நேர்ந்த துன்பங்களை வரிசைப்படுத்தி உரைப்பது.

அடுத்து கருப்பம் அமையும் இப்பகுதியில் துன்பத்தினை நீக்க திருமாலவனுக்குக் கூத்தினை நிகழ்த்த முடிவு செய்யப்படும்.

அடுத்து கொளு அமையும். கொளுவில் கூத்தினைச் செய்வதற்கு உரிய பெண்கள் அழைக்கப்படுவர்.

அடுத்து எடுத்துக்காட்டு எனும் பகுதியுள் கூத்தினைத் தொடங்க பெண்களை முறைப்பட நிறுத்துதல் அமையும்.

கூத்துள் படுதல் எனும் பகுதி அடுத்ததாய் அமையும். இதில் உரிய பாடல்கள் பாடப்பட்டு பெண்கள் கூத்தினைச் செய்வார்கள்.

கூத்தில் ஒன்றன்பகுதி, உள்வரி வாழ்த்து, முன்னிலைப் பரவல், படர்க்கைப் பரவல் எனும் பகுதிகளை அமைத்து திருமாலின் புகழினை எடுத்து மொழிந்து அவனது அருள் வேண்டி நிற்பதாய் ஆடல் அமையும்.

இவ்வமைப்பு இன்னமும் நாட்டியத்துள் நாட்டிய நாடகமாக அமைகின்ற அனைத்து நிகழ்வுகளிலும் இருந்து வருவதைக் காணலாம்.

ஆய்ச்சியர் குரவை பேசுகின்ற கொளு, எடுத்துக்காட்டு எனும் பகுதிகள் இன்றுவரை நடனத்தில் முறை மாறாமல் இருப்பதைக் காண முடிகின்றது. ஒரு நடன நாடகத்தில் தேவையான மாந்தர்களைத் தேர்வு செய்வதும் அவர்களுக்கு உரிய பயிற்சியும் செயல்பாடு குறித்து விளக்குவதும் என்பன உண்டே இவற்றைத் தானே கொளுவும் எடுத்துக்காட்டும் கூறி நிற்கின்றன.

**குன்றக்குரவை**

இக்குரவை குறிஞ்சி நிலத்தைச் சார்ந்தது. குறிஞ்சி நிலம் என்பது மலை நிலம். குறிஞ்சியின் இறைவன் முருகன். குறிஞ்சி நிலமக்கள் தங்கள் நிலத்தில் நடைபெற்ற உயரிய செயலான (கண்ணகி தெய்வமாக மாற்றம் பெற்று வான் புகுந்தது) ஒன்றினுக்கு முருகனை வாழ்த்தியும் புகழ்ந்தும் ஆடுதல் குன்றக் குரவை ஆகும். இக்கூத்து,

**உரைப்பாட்டுமடை எனும் பகுதியில் தொடங்கும்.**
**கொளுச் சொல் அமையும்.**
**தொடர்ந்து சிறைப்புறம் எனும் பகுதி அமையும்.**
**பாட்டு மடையில் முருகனைப் புகழ்தல் நடைபெறும்.**
**முருகனை வழிபடுவது தெய்வம் பராஅயது எனும் பகுதி நிகழ்த்தப்படும்.**

மீண்டும் பாட்டுமடை வெவ்வேறு நிலைகளில் ஆடப்பட்டு நடனம் முடியும். இக்குன்றக் குரவையும் இன்று நடனத்தில் நடைபெறும் நாட்டிய நாடகத்தின் முன்னோடியாக இருத்தலைக் காண இயலுகின்றது. சிலப்பதிகாரம் சாக்கையர் கூத்தும் நடத்தப் பட்டதாக,

**“திருநிலைச் சேவடி சிலம்புவாய் புலம்பவும்**
**பரிதரு செங்கையில் படுபறை யார்ப்பவும்**
**செங்கண் ஆயிரம் திருக்குறிப்பு அருளவும்**
**செஞ்சடை சென்று திகை முகம் அலம்பவும்**
**பாடகம் பதையாது சூடகம் துளங்காது**
**மேகலை ஒலியாது மென்முலை அசையாது**
**வார்குழை ஆடாது மணிக்குழல் அவிழாது**
**உமையவள் ஒருதிறளாக ஓங்கிய**
**இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்**
**பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்**
**கூத்தச் சாக்கையன் ஆடலின்”**

எனும் வரிகளில் விளக்கியுள்ளது. சாக்கையர் கூத்தில் சாக்கையன் எனும் கூத்து நிகழ்த்து பவன் தன்னுடன் ஒரு பெண்ணைச் சேர்த்துக்கொண்டு சிவபெருமான் ஆடிய கொட்டிச் சேதம் எனும் கூத்தினை நிகழ்த்தினான் என்று சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டியுள்ளது.

**நிறைவுரை**

சிலப்பதிகாரம் தமிழர் நடனச் செயல்பாடுகள் அனைத்தையும் விரிவாக எடுத்து மொழிந்துள்ளது. நடனம் ஆடும் பெண்கற்க வேண்டியன, கற்கத் தொடங்கும் வயது, கற்க வேண்டிய காலம், அரங்கேற்றம் செய்யும் முறை, அரங்கேற்றத்தில் செய்யப்பட வேண்டிய கூத்துகள் இவற்றை விளக்கியுள்ளது. நடனத்தினுக்கு உறுதுணையாய் உள்ள ஆடல் ஆசிரியன் (நட்டுவனார்) தகுதி, தண்ணுமை குழல், யாழ் இவற்றை இயக்கும் கலைஞர்களின் செயல்திறன்களை விளக்கியுள்ளது. நாட்டிய அரங்கின் பரப்பு, அரங்கின் அமைப்பு, அரங்கில் பொருத்தப்படும் தூண்கள், எழினிகள், அரங்கில் கலைஞர்கள் அமரும் பகுதி என ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்துக் கூறுகிறது. நடன அரங்கேற்றம் செய்யும் கலைஞர் எவ்வாறு மேடை ஏறுதல் வேண்டும். எவ்வாறு நடனத்தைத்

தொடங்கி நிகழ்ச்சியில் எவ்வகை நடனங்களை ஆட வேண்டும் என்று விளக்கியுள்ளது.

பொது மேடை நிகழ்வுகளில் செய்யப்படும் கௌத்துவத்தையும் பதினோரு ஆடல்களையும் விளக்கியுள்ளது. வேந்தன் அவையில் நடனமிடுதலையும் பொது மன்றில் நடனமிடுதலையும் வேறுபடுத்தி விளக்கியுள்ளது. மகளிர்களுக்கே உரிய எண்வகை வரிக்கோலத்தை காரணங்களைக் காட்டியும் செயல்பாடுகளை விளக்கியும் தந்துள்ளது. நிலம்சார் உணர்வுகளை வெளிப்படுத்தும் வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை இவற்றை நடத்தும் முறை, நடத்தப்படும்போது மேற்கொள்ள வேண்டிய நடனம் அதற்குரிய பாடல் இவற்றை விளக்கியுள்ளது. அக்காலத்தில் வழக்கில் இருந்த ஒப்பனை முறைகளையும் தெளிவுபடுத்தியுள்ளது. சாக்கையர் கூத்து எனும் கூத்து வகையினையும் எடுத்துக் காட்டியுள்ளது. இன்றைய நடனத்தினுக்குரிய நான்கு பாவங்களையும் சிலப்பதிகாரம் விரிவாக விளக்கமாக எடுத்து மொழிந்துள்ளது.

## துணைநூற் பட்டியல்

1. பா.சரவணன், சிலப்பதிகாரம் எல்லோர்க்குமான எளிய உரை, சந்தியா பதிப்பகம், 2008
2. க.பஞ்சாங்கம், சிலப்பதிகாரம், அன்னம் பதிப்பகம், 2008
3. சிலம்பொலி சு. செல்லப்பன், மணிமேகலை மூலமும் தெளிவுரையும், பாரதி பதிப்பகம், 1988.
4. புலியூர்க் கேசிகன், மணிமேகலை, ரிதம் வெளியீடு, 2005.